இந்து சமய அறநிலையத்துறை

**அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில்**

மேச்சேரி – 636 453 .மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்.

Website:mecheribadrakaliamman.tinfo.in, E-Mail:mecheribadrakaliammankovil@gmail.com

போன்:04298–278133

## தற்காலிக சாமியானா நிழல் பந்தல் அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இத்திருக்கோயிலில் 1426–27ம் பசலி (பணி ஆணை கிடைக்கபெற்ற நாளிலிருந்து 30.06.2018 முடிய உள்ள) காலத்திற்கு பிரதி அமாவாசை மற்றும் நிர்வாகம் கோரும் நாட்களில் திருக்கோயில் வளாகங்கள் மற்றும் நிர்வாகம் கோரும் இடங்களில் தற்காலிக சாமியானா நிழல் பந்தல் அமைக்கும் பணிக்கு முன் அனுபவமும் தகுதியும் உடைய ஒப்பந்ததாரர்களிடமிருந்து இத்திருக்கோயில் செயல் அலுவலரால் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை | ரூ.250/– (Not Refundable) |
| 2 | ஒப்பந்தப்புள்ளி டெபாசிட் தொகை | ரூ.50,000/– |
| 4 | ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கும் நாள் | 03.04.2017 முதல் 11.04.2017 முடிய |
| 3 | ஒப்பந்தப்புள்ளி கொடுக்க கடைசி நாள், நேரம் | 12.04.2017 பிற்பகல் 03.00 மணி வரை |
| 5 | ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடைபெறும் நாள் | 12.04.2017 பிற்பகல் 03.30 மணி |
| 6 | ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடைபெறும் இடம் | திருக்கோயில் வளாகம் |

1) மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் கலந்து விரும்புகிறவர்கள் ரூ.50,000/–க்கான வைப்புத் தொகைக்கு "**<u>Executive Officer, Arulmigu Badrakaliamman Temple, Mecheri</u>".** என்ற பெயரில் (மேச்சேரியில் மாற்றும் படியான) வரைவோலை செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

2) இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும், (mecheribadrakaliamman.tinfo.in) என்ற திருக்கோயில் இணையதளத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

**இப்படிக்கு**

மு. ரமணிகாந்தன், பி.ஏ.பி.எல்.,
செயல் அலுவலர்

பெ. ரமேஷ், எம். ஏ., பி.எல்.,
தக்கார் / உதவிஆணையர்

இடம். மேச்சேரி, நாள். 30.03.2017

## அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில், மேச்சேரி
## மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்

## தற்காலிக சாமியானா நிழல் பந்தல் அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

## (பசலி – 1426-27)

இத்திருக்கோயிலில் 1426–27ம் பசலி (பணி ஆணை கிடைக்கபெற்ற நாளிலிருந்து 30.06.2018 முடிய உள்ள) காலத்திற்கு பிரதி அமாவாசை மற்றும் நிர்வாகம் கோரும் நாட்களில் திருக்கோயில் வளாகங்கள் மற்றும் நிர்வாகம் கோரும் இடங்களில் தற்காலிக சாமியானா நிழல் பந்தல் அமைக்கும் பணிக்கு முன் அனுபவமும் தகுதியும் உடைய ஒப்பந்ததாரர்களிடமிருந்து இத்திருக்கோயில் செயல் அலுவலரால் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

## உரிமம் இன விபரம்

| வ. எண் | உரிமம் இனம் | உரிமம் காலம் | ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை ரூ. பை. |
|---|---|---|---|
| 1. | தற்காலிக சாமியான நிழல் பந்தல் அமைக்கும் பணி | பணி ஆணை கிடைக்க பெற்ற நாளிலிருந்து 30.06.2018 முடிய உள்ள காலத்திற்கு | 50000.00 |

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி திறப்பு தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை சட்ட விதிகளின்படி நடத்தப்படும்.
2. ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் கண்டிப்பாக இந்து சமயத்தவராக இருக்க வேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளி உரிமத்தில் வைப்புத் தொகை செலுத்தியவர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
4. ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புவோர் படிவம் 1க்கு ரூ.250.00 செலுத்தி 03.04.2017 முதல் 11.04.2017 முடிய (அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில்) பெற்றுக்கொள்ளலாம்.
5. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 12.04.2017 பிற்பகல் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.
6. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை திருக்கோயில் அலுவலகத்தில் உரிய தொகையினை ரொக்கமாக செலுத்தி, பலவகை இரசீது பெற்றுக்கொள்ளலாம்.

7. ஒப்பந்தப்புள்ளியுடன் செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத் தொகையினை ரொக்கமாக திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி, அதற்கான பலவகை ரசீதினை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்தல் வேண்டும்.
8. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 12.04.2017 அன்று பிற்பகல் 03.30 மணிக்கு திருக்கோயில் செயல் அலுவலர் முன் ஆஜராகியுள்ள நபர்கள் மற்றும் துறை அதிகாரிகள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி திறந்து பதிவுசெய்யப்படும்.
9. ஒப்பந்தக்காரர்கள் பணியினைச் செய்ய வேண்டியுள்ள பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஒப்பந்தப்புள்ளி இடம் பெற்றுள்ள இனங்களின் தன்மைகளை ஆராய்ந்து அதற்கேற்ப ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும். பின்னர் மேற்படி இடம் சம்மந்தமாக எழுப்பும் எந்தப் புகாரும், சர்ச்சையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
10. ஒப்பந்ததாரர் இப்பணியினை தனது சொந்த பொறுப்பில் பணியின் தரத்தினை உறுதி பெற்று செய்து முடித்தல் வேண்டும்.
11. ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் நியாயமான தொகைக்கு இல்லை என்றோ அல்லது கூட்டு சேர்ந்து கொண்டு கேட்பதாகவோ திருக்கோயில் நிர்வாகம் கருதினால் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை காரணம் கூறாமல் நிறுத்தி வைக்க கோயில் நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு. இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.
12. எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் காரணம் கூறாமல் நிராகரிக்க திருக்கோயில் செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
13. ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தக்காரர், தங்களது விலைப்புள்ளியில் சதுரம் 1க்கு (10x10) தொகை குறிப்பிட வேண்டும். இது அனைத்து செலவுகளையும் உள்ளடக்கியதாகும்.
14. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்படும் விலைப்புள்ளிகளில் அடித்தல், திருத்தம் செய்தல் கூடாது. அவ்வாறு நேரிடும் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
15. ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் தொடர்பான நிகழ்வுகளின் இணை ஆணையரின் முடிவே இறுதியானது. அவ்வாறு இறுதியாக்கப்பட்டவுடன் ஒப்பந்ததாரருக்கு திருக்கோயிலில் இருந்து பணி உத்தரவு (Work Order) வழங்கப்படும்.
16. இப்பணிக்கு எக்காரணம் கொண்டும் முன்பணம் கொடுக்கப்பட மாட்டாது.
17. ஒப்பந்ததாரரால் செலுத்தப்படும் வைப்புத்தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது.
18. ஒப்பந்தப்புள்ளி உரிமம் எடுத்தவர் தவிர இதர ஒப்பந்தப்புள்ளி தாரர்களின் வைப்புத்தெகை பதினைந்து தினங்களில் திரும்ப வழங்கப்படும்.
19. இப்பணியில் எதிர்பாராத அசம்பாவிதங்கள் ஏற்படின் அதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும், பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களின் பாதுகாப்பு உட்பட அனைத்திற்கும் ஒப்பந்தக்காரரே முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.

20. ஒப்பந்ததாரர் பணியினை இடையில் நிறுத்தி தொடராதிருப்பின் அவ்வினங்களை செயலாக்க திருக்கோயில் நிர்வாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் ஒப்பந்தக்காரரே பொறுப்பாவார்.
21. ஒப்பந்தப்புள்ளியில் ஒப்புதல் பெற்றவர்களுக்கு இராஜீகம் தெய்வீகம் ஆகியவற்றால் ஏற்படும் இழப்புகளுக்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பு ஏற்க இயலாது.
22. ஒப்பந்ததாரர் நல்ல தரமான சாமியானா துணி மூலம் பந்தல் அமைத்து தர வேண்டும். சாமியானா துணி கிழிந்தோ, துவாரங்கள் உடையதாகவோ இருக்க கூடாது. திருக்கோயிலுக்குள் பயன்படுத்த வேண்டியுள்ள நிலையில், மற்ற காரியங்களுக்கு பயன்படுத்தபட்ட சாமியானா பந்தலை திருக்கோயிலுக்குள் பயன்படுத்த கூடாது.
23. மேற்கண்ட நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையை மீறினாலும், ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து மறு ஏலம் விட செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. ஒப்பந்தப்புள்ளியில் இழப்பு ஏற்பட்டால் அதற்கு முன் ஏலதாரரே பொறுப்பு ஆகும்.
24. ஒவ்வொரு அமாவாசைக்கும் முதல் நாள் பிற்பகலிலேயே திருக்கோயில் நிர்வாகம் குறிப்பிடும் இடங்களில் துணிபந்தல் அமைத்து தர வேண்டும். அதனை மீண்டும் அமாவாசை முடிந்து மறுநாள் பிற்பகலுக்குள் முழுமையாக அகற்றிக்கொள்ள வேண்டும்.
25. ஒப்பந்தப்புள்ளிதாரர் மேற்படி நிபந்தனைகட்கும், இத்திருக்கோயிலில் அவ்வப்போது இது தொடர்பான அரசு ஆணைகள், துறை உத்திரவுகளுக்கு கட்டுப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டதாக கருதப்படும்.
26. ஒப்பந்தப்புள்ளி உரிமத்தை உள்குத்தகைக்கு விடக்கூடாது. இதனை மீறி செய்தது பற்றி தெரிவந்தால் ஏலதாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகையை திருக்கோவிலுக்கு ஆதாயமாக்கி மறு ஒப்பந்தப்புள்ளி விட செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. மறு ஏலத்தில் இழப்பு ஏற்பட்டால் அதற்கு முன் ஏலதாரரே முழுப் பொறுப்பு.
27. எந்த ஒரு நபரையும் திருக்கோயிலின் நலன் கருதி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கவோ, நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
28. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளவும்.

பெ. ரமேஷ், எம்.ஏ.பி.எல்.,
தக்கார் / உதவிஆணையர்

மு. ரமணிகாந்தன், பி.ஏ.பி.எல்.,
செயல் அலுவலர்

இடம். மேச்சேரி,
நாள்.30.03.2017